# PRANAV JOURNAL OF FINE ARTS

ISSN: 2582-9513

# உலகியல் நடனங்களில் கைச்செயற்பாட்டின் பயன்பாடுகள்

**பத்மினி. S & முனைவர் வானதி இரகுராமன்**

**இசை மற்றும் நுண்கலைத் துறை,**

**வேல்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ், டெக்னாலகஜி &**

**அட்வான்ஸ்டு ஸ்டடீஸ் (VISTAS)**

**ஆய்வுச்சுருக்கம்**

உலகின் பல்வேறு நாட்டுப்புற மற்றும் செவ்வியல் நடனங்களிலும், கைச்சைகைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒவ்வொரு கலாச்சாரமும் கைச்செயற்பாடுகளை தனித்துவமாக உருவாக்கியிருக்கிறது. கைச் செயற்பாடுகளின் பொதுவான நோக்கமானது நிகழ்வுகளையும் கதாபாத்திரங்களையும் உருவாக்க கைகளைப் பயன்படுத்தி கதைசொல்லுதல், உணர்வுகளின் வெளிப்பாடாக இன்பம், துன்பம், கோபம் போன்ற மனநிலைகளை கையசைவால் வெளிப்படுத்துதல், இயற்கையின் பிரதிபலிப்பான மலர்கள், பறவைகள், நீர் அலைகள் போன்ற இயற்கை அம்சங்களை கைகளால் உருவாக்குதல் மற்றும் ஆன்மீக அர்த்தங்களை விளக்கும் தெய்வீகக் கதைகளின் ஆழமான கருத்துகளை விவரித்தல் என்பவையே. உலகியல் நடனங்களில் கை இயக்கத்தின் சிறப்பம்சங்களாவன, விரல்கள் மற்றும் கை நிலைகள் மிக நுணுக்கமாக வடிவமைத்தல், நடனம் பயில்வோர் சிறு வயதிலேயே தொடங்கி கைகளை வளைத்தல், சுழற்றல் போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளுதல், கைகளின் மென்மை உடலசைவுகளுடன் நுட்பமாக இணைந்து செயற்படுதல் என்பன ஆகும். உலகம் முழுவதும், நடனங்களில் கைச் செயற்பாடுகள் ஒரு முக்கியமான மொழி போல் செயல்படுகின்றன. இதன் மூலம் நடனங்களின் அழகு, ஆழம், அற்புதம் மேலும் உயர்த்தப்படுகின்றது. இந்த கட்டுரையில், பேலே, ஃப்ளமென்கோ, கோன், பாலினி, ஆப்பிரிக்க உள்ளிட்ட உலகின் முக்கியமான நடன வடிவங்களில் கைச்செயற்பாடுகளின் பங்கு, அவை வெளிப்படுத்தும் உணர்வு மற்றும் அச்செயற்பாடுகள் இலக்கிய, சமய, சமூக அடிப்படைகளில் எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதையும், அவை சமூக நிகழ்வுகளில், கட்டுரைகளில், மேடைக்காட்சிகளில் எவ்வாறு செயல்படுகின்றன என்பதையும் ஆய்வு செய்ய முயல்கின்றது.

**திறவுச்சொல்:** உலகியல் நடனங்களில் கைச்செயற்பாடுகள், செவ்வியல் நடன கைச்செயற்பாடுகள், நடன வகைகளில் கைக்குறியீடுகள், கைச்செய்கைகள்

**முன்னுரை**

மனிதன் தனது வரலாற்றின் ஆரம்பத்திலிருந்தே உணர்வுகளையும், சிந்தனைகளையும், நம்பிக்கைகளையும் வெளிப்படுத்த பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தி வந்துள்ளான். அந்த வகையில், நடனம் என்பது ஒரு மிகப் பழமையான, சக்திவாய்ந்த உணர்வுகளை வெளிப்படுத்தும் பாவம் மிகுந்த கலை ஆகும். உலகம் முழுவதும் பரவலாக காணப்படும் இந்த நடன வடிவங்களில், உடல் இயக்கங்கள், முகபாவங்கள், கால்களின் அசைவுகள் போன்றவை முக்கியம் வாய்ந்தனவாக இருப்பினும், கைகளின் செயற்பாடுகள் என்பது ஆடல் கலைக்கு உறுதுணையாக அமைந்திருக்கிறது எனின் மிகையாகாது. கைகள், மொழியற்ற நிலையில் பேசும் கருவியாகவும், இன்பதுன்பங்களை நுணுக்கமாக வெளிப்படுத்தும் ஆற்றலை கொண்டிருக்கின்றன. உலகின் பல்வேறு நாடுகளின் நிகழ்த்து கலைகளில் ஒன்றான நடன வடிவங்களில், அந்தந்த பண்பாட்டின் அடையாளமாகவும், கலைச்செறிவின் வெளிப்பாடாகவும் கைகளின் செயற்பாடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**பேலே நடனத்தில் கைச்செயற்பாடுகள்**

கைக்குறியீடுகளை பயன்படுத்தி நிகழ்த்தப்படும் உலகியல் நடனங்களில் ஒன்றான பேலே, மேற்கு ஐரோப்பாவில் தோன்றிய ஒரு பாரம்பரிய நடனக்கலை ஆகும். இது சீரான உடல் கட்டுப்பாடும், இசையுடனான இயக்கங்களும், உணர்வுகளை வெளிப்படுத்தும் நிலையும் சேர்ந்து உருவான சிறந்த நடன வடிவமாகும். பேலே நடனம் என்பது இயற்கையோடு இசையை இணைக்கும் ஒரு நுட்பமான கலை வடிவம். இந்நடனம் பதினைந்தாம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றியது. இத்தாலியின் அரசவைகளில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளில், இசையுடன் கூடிய நடனமாக பேலே பயன்படுத்தப்பட்டது. அன்றைய நாளில் இந்நடனம் " சிறிய நடனம்" என்ற பொருள் கொண்ட “பலேடோ ”என்று அழைக்கப்பட்டது. இந்நடனத்தினை ப்ரான்ஸ் நாட்டில் பிரபலப்படுத்தியவர் கிங் லூயி XIV. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பேலே நடனம் ரஷ்யாவில் செழித்து வளர்ந்தது.

சாய்கோவ்ஸ்கி போன்ற இசையமைப்பாளர்கள், நட் க்ராக்கர், ஸ்வான் லேக், ஸ்லீப்பிங்க் பியூட்டி போன்ற பிரபலமான பேலே நிகழ்ச்சிகளை உருவாக்கினர். இருபதாம்

நூற்றாண்டில் மெர்ஸ் கனிங்காம், ஜார்ஜ் பாலஞ்சின் போன்ற கலைஞர்கள் மூலம் நவீன பேலே நடனம் உருவானது. கால் விரல்களின் மேல் நிற்பது , கால்களை வெளியில் சுழற்றும் நிலை,மென்மை மற்றும் துல்லியம், பார்வையைக் கவரும் ஆடை, மேடை அமைப்பு போன்ற சிறப்பம்சங்களைக்கொண்ட இந்நடனத்தின் கைச்செயற்பாடுகள் கீழ்வருமாறு.

1.போர் டு ப்ரா -கைகளை எடுத்துச் செலுத்தும் முறை. இம்முறையானது , கைகளின் சீரான இயக்கங்களை குறிக்கின்ற ஓர் செயற்பாடாகும். இது ஐவகையான கை நிலைகளைக் குறிக்கின்றது.

முதல் நிலை- இரு கைகளும் உடலின் முன்பாக வட்டமாக வைத்து, விரல்கள் ஒரு மறைமுகத் தொடுதலில் இருக்கும் ஆரம்ப நிலை.

இரண்டாம் நிலை- இரு கைகளும் இருபுறமாக விரிக்கப்பட்டிருக்கும், ஆனால் வளைந்த நிலையில் அழைப்பை குறிக்கும்.

மூன்று, நான்கு மற்றும் ஐந்தாம் நிலைகள் கைகளின் ஒருங்கிணைந்த நிலைகளைக் குறிக்கின்றன. அவை முறையே கைகள் கீழ்நிலையில் ஓய்வில் இருத்தல் (ப்ராஸ் பாஸ்), முன்னே நெகிழ்ச்சியுடன் செலுத்துதல் (என் அவந்த்), தலைக்கு மேல் வைத்தல் (என் ஹாத்)என்பன.

2. ஏபோல்மொன் -தோள்களின் பாவம். இவை நேரடியான கைச்சைகைகளல்ல, ஆனால் கைகள் எந்த வழியில் சுழல வேண்டும், முகம் எந்த பக்கம் பார்க்க வேண்டும் என்பதையும், கைகளின் செயற்பாட்டினையும் தீர்மானிக்கிறது.

3. உணர்வுகளைக் காட்டும் கைச்சைகைகள் - பேலே நடனத்தில்,அன்பு,துன்பம்,இன்பம்,ஆவல், எதிர்நோக்கல் போன்ற உணர்வுகளாவன, கைகளின் சிறிய சுழற்சிகள், விரல் நிலைகள் மற்றும் முதுகுடன் சேர்ந்து வெளிப்படுகின்றன

4. உடலுடன் இணைந்து செயல்படும் கைகள்- பேலே நடனத்தில் கைசைகைகள் தனிப்பட்டவை அல்ல. அவை கால்களின் நிலைக்கு ஏற்ப அமைக்கப்படுகின்றன. குதிப்பு (ஜெதே), சுழற்சி (பிரௌஎட்),அல்லது சீரான நடை (அடேகியோ) ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுகின்றன.

5. மைம் எனப்படுவது கைவழி கதை சொல்லும் வடிவம் ஆகும். முன்பிருந்த பேலே நடனங்களில் மைம் எனப்படும் கைச்செயற்பாடுகளைப் பயன்படுத்தி கதைகள் சொல்லப்பட்டன. உதாரணமாக,

முயற்சி – கையை மார்பில் வைத்து, மேலே உயர்த்தல்

முடிவு – கையை கிழக்கே சுழற்றுவது

அன்பு – இரு கைகளாலும் மார்பைத் தொட்டு, பின் காதலைக் காட்டும் பாவம்

6. சுதந்திரமான கைமுறைகள்- இன்றைய காலத்து பேலே நடனத்தில்,நிர்ணயிக்கப்படாத கதைக்கேற்ற கைச்செயற்பாடுகளான இம்முறை இடம்பெறுகின்றன.

**ஆப்பிரிக்க நடனங்களில் கைச்செயற்பாடுகள்**

ஆப்பிரிக்க நடனங்கள் என்பது வெறும் கால் அசைவுகளும், தாள ஒத்திசைவும் அல்ல. அந்த நடனங்களில் கை சைகைகள் ஒரு மெய்யான மொழியாக உருமாறுகின்றன. அன்றாட வாழ்க்கை, ஆன்மிக அனுபவங்கள், சமூக நிகழ்ச்சிகள் என அனைத்தையும் கைகள் மூலமாகவே கதைபோல் காட்சிப்படுத்துதற்கு கைச்செயற்பாடுகளே பயன்படுத்தப்படுகின்றன. ஆப்பிரிக்க நடனங்களில் கை சைகைகள் என்பது ஒரு மொழி, அது பழங்குடி அறிவின் ஒரு பகுதி என்றே கூறலாம். இவை உணர்வுகள், கதை, மரபுகள் ஆகியவற்றை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன.

ஆப்பிரிக்க நடனங்களில் பொதுவான கைச்செயற்பாடுகள் பற்றிய செய்திகள் கீழ்வருமாறு.

1. அர்ப்பணிப்பு சைகைகள்- கைகளைக் கொண்டு மேலே அல்லது கீழே நகர்த்துதல்.இது பிரார்த்தனை, தெய்வத்திற்கான அர்ப்பணிப்பு போன்றவற்றை குறிக்க பயன்படுத்தப்படுகின்றது.

2. கைதட்டல் - இது தாள ஒத்திசைவை மட்டுமல்ல, சில சமயங்களில் இது ஒரு தனி நடனமாகவும் நிகழ்த்தப்படும். கைதட்டலில் வரும் ஒலி வகைகள் நடனத்திற்குரிய பாவத்தினை செம்மைப்படுத்துவதனை நாம் உணர இயலும்.

3.அழைப்பு–பதிலளிப்பு சைகைகள்- கைகளை உயர்த்தி, வளைத்து அல்லது சுழற்றுவதன் மூலம் மற்ற நடனக்கலைஞர்களுக்கு அல்லது இசைக்குழுவிற்கு சைகைகள் அளிப்பர்.

4. உருவமிகு சைகைகள்- விலங்குகள், வேளாண்மை, வேட்டையாடுதல் போன்ற இயற்கை சார்ந்த நிகழ்வுகளை கை சைகைகளால் உருவகப்படுத்துவர்.

**ஃப்ளமெங்கோவில் கைச்செயற்பாடுகள்**

ஸ்பெயின் நாட்டின் பாரம்பரியமான ஃப்ளெமென்கோ நடனம் என்பது உணர்வுபூர்வமான நடனமாகும். இதில், கால்களின் அசைவுகள் மட்டுமல்ல, கைகள் மற்றும் விரல்களின் அசைவுகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த நடனத்தில் பயன்படுத்தப்படும் முக்கியமான சில கைச்சைகைகள் மற்றும் அதன் பயன்பாடு பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு.

1. ஃப்ளோரியோ – விரல்களின் மலர்த் திறப்பு

ஃப்ளோரியோ என்பது விரல்களை மெதுவாக வளைத்துப் பின்னர் விரிக்கின்ற ஒரு அழகான சுழற்சி. இது பூ மலர்வதை போலத் தோன்றும். இச்செயற்பாட்டினை, பெண்கள் விரல்களை மேலாகவோ அல்லது வெளி நோக்கியோ சுழற்றி, கைகளின் அழகிய சுழற்சியை காண்பிப்பர். ஆண்கள் அதிக வலிமை கொண்டு, சுருக்கமாகவும், உறுதியுடனும் நிகழ்த்துவர். இச்செய்கையில் விரல்கள் தனித்தனியாக நகர்வது மட்டுமன்றி முழங்கையில் இருந்து இதன் இயக்கம் தொடங்கும்.

2. ப்ராசியோ – முழங்கையின் நகர்வுகள்

இது கைகளை முழுவதும் சுழற்றும் அல்லது தூக்கும் நடையை குறிக்கிறது. ப்ராசியோ என்பது கை மற்றும் தோள் இயக்கங்களின் ஒருங்கிணைப்பு. விரல்களின் ஃப்ளோரியோ இந்த ப்ராசியோ இயக்கத்தில் இணைக்கப்படும். மேடையில் நிறைந்து ஆடுதற்கும், பார்வையாளர்களை ஈர்க்கவும், இசையின் ஏற்ற இறக்கங்களுக்கு உடனடி பின்விளைவாக செயல் படவும் இச்செய்கை பயன்படுத்தப்பெறும்

3. மார்காஜே- உணர்வுக் கோடுகள் அமைத்தல்

இது ஒரு சமயோசிதமான கைச்சைகை, இசையின் தாளத்தினை உறுதிப்படுத்தும் வகையில் செய்யப்படும். கையை உயர்த்தி, ஒரு பக்கம் அசைத்து, பின்னர் கால்களை இசையோடு இணைக்கும். இது ஒரு வகையான சமநிலையை ஏற்படுத்தும்.

4. பல்மாஸ் – கைதட்டல்

இது ஃப்ளமென்கோவில் கைப்பயன்பாட்டின் முக்கிய அம்சம். இரகசியமாக கணக்கீடு செய்யவும், நுட்பமான விடயங்களுக்கு ஏற்ப ஒலி வெளியிடவும் பயன்படுத்தப்படுகிறது. இச்செயற்பாட்டினை பல்மாஸ் ஸார்டஸ் - மென்மையான கைதட்டல்கள், பல்மாஸ்

ISSN: 2582-9513

க்ளாரஸ் - உரத்த கைதட்டல்கள் என்று இரு வகைப்படுத்துகின்றனர் இந்நடனக்கலை வல்லுநர்.

5. பாசியோ- அழகான நடைமுறை. கால்களுடன் சேர்ந்து கைகளை மெதுவாக நடன மேடையின் ஒரு பக்கம் இருந்து மற்ற பக்கம் வரை நகர்த்தும் நடை.

**கோன் நடனத்தில் கைச்செயற்பாடுகள்**

தாய்லாந்து நாட்டின் கோன் நடனம் என்பது ஒரு பாரம்பரிய நாடக நடன வடிவம். இது பெரும்பாலும் ராமகீன் எனும் ராமாயணத்தின் தாய்லாந்து பதிப்பைப் பிரதிபலிக்கிறது. இந்த நடனத்தில், முகமூடி, உடற் கட்டுப்பாடு, மற்றும் கைச்செயற்பாடுகள் ஆகியவை கதையை கூறும் கருவிகளாக உள்ளன. கோன் நடனத்தில் கைச் சைகைகள் என்பது ஒரு தனித்துவமான மொழியாகும். கோன் நடனம், இந்திய நடனங்களின் தாக்கத்தை ஏற்று, ஆனால் தாய்லாந்து பாரம்பரியத்துடன் இணைந்து உருவானது. இதன் கைசைகைகள் துல்லியமான, நுட்பமான மற்றும் சின்னச்சின்ன சுழற்சிகளைக் கொண்டவை. கோன் நடனத்தில் முத்திரைகள் எனப்படுவன பெரும்பாலும் பழங்கால அரசாட்சி, யுத்தம், அன்பு, தியாகம்,துன்பம் போன்ற காட்சிகளை வெளிப்படுத்தும். ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் தனி கைச்செயற்பாடுகள் உள்ளன. மேலும் ங்காய் மூயே, க்வாம் மூயே, சாட் மூயே என்று கைச்செயற்பாடுகளைப் பயன்படுத்தும் வகைகளைக் கொண்டுள்ளது இந்நடனம். இவை, தலைவன் அல்லது தேவர்களைக் குறிப்பது உள்ளங்கையை மேல் நோக்க காட்டுவது ங்காய் முயே என்றும், பகைவர்களால் அல்லது வீரர்களால் அதிகம் பயன்படுத்தப்படும் உள்ளங்கையை கீழே நோக்கி வைப்பது க்வாம் மூயே என்றும், கைகள் ஒன்றில் ஒன்றாக புகுத்துதல் சாட் முயே என்றும் இந்நடனத்தின் வல்லுநர்கள் வகுத்துரைக்கின்றனர். மேலும், உணர்வுகளை காட்டும் சைகைகளாக கையை மார்பில் வைத்து, மெதுவாக எதிர்நோக்கும் பாவத்துடன் தூக்குதல் அன்பினை குறிப்பதாகும் என்றும், கையை முகத்தரையில் கொண்டு சென்று மெதுவாக கீழே விடுதல் துயரத்தினை குறிக்கும் என்றும், கையை நேராக உயர்த்தி விரலை வளைத்து வலிமையை அடையாளப்படுத்தல் வீரம் என்றும் கூறுவதாக அறிகின்றோம். இச்செயற்பாடுகள் அனைத்தும் அணிவகுப்பு, இசை மற்றும் முகபாவங்களுடன் இணைந்து மிக சீரான காட்சியமைப்பை வழங்குகின்றன.

பான்டோமைம் எனும் கதை சொல்லும் முறையானது கோன் நடனத்தில் இசை, பாடல்கள் மற்றும் கைச்சைகைகள் மூலமாகவே சொல்லப்படுகின்றன. இந்நடன வடிவத்தின் பிற கூறுகளான முகமூடிகளுடன் கூடிய கைச் சைகைகள் மிக அழுத்தமான கருத்துக்களை வெளிப்படுத்தும்.

**கபுகியில் கைச்செயற்பாடுகள்**

இந்நடன வகை ஜப்பானிய பாரம்பரிய நாடக வடிவங்களை சார்ந்த வகையாகின்றது. கபுகி, எடோ காலப்பகுதியில் ஏற்பட்ட சுமார் இருநூற்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு முன் உருவாகியது. அந்த காலத்தில் உருவான வணிக, சமூக கலாச்சாரம் போன்றவை கபுகியின் பொலிவான உடைகள், மேடைக் காட்சிகள், மற்றும் நாடகக் கதைகளில் பிரதிபலிக்கின்றது . இதில் சில கதைகள் மாபெரும் நாயகர்களை பற்றியவையாகவும், மற்றவை சாதாரண மக்களின் வாழ்க்கை, அவர்கள் தனிப்பட்ட விருப்பங்கள் மற்றும் சமூகக் கடமைகள் இடையிலான முரண்பாட்டை சமாளிக்க முயல்வதை பற்றியவையாகவும் இருக்கும்.

கபுகி நடனத்தில் கைச் செயற்பாடுகளின் பங்கு இன்றியமையாத ஒன்று. இந்நடனத்தில் கைச் செயற்பாடுகள் என்பது ஒரு வகையான கட்டுப்பாடுடைய, அழகியல் அடிப்படையிலான செயற்பாடுகள் ஆகும். ஒவ்வொரு சைகையும் ஒரு குறிப்பிட்ட உணர்வை அல்லது செயலை எடுத்துரைக்கின்ற வகையில் கதை சொல்லும் கருவியாகப் பயன்படுகின்றது. கபுகி நடனம் இயல்பான செயற்திறனைவிட மிகைப்படுத்தப்பட்ட சைகைகள் மூலம் பார்வையாளரின் கவனத்தை ஈர்க்கிறது. கை உயர்த்தும் விதம், விரல்கள் விரித்துப் பிடிப்பது, அல்லது மெதுவாக சுழலும் கை இயக்கம் போன்றவை மிகைப்படுத்திய நடைமுறைகளாக அறியப்படுகிறது.

1.காடா (Kata): கபுகி நடனத்தில் காடா என்பது பரம்பரையாக பரிமாறப்பட்ட கை மற்றும் உடல்நிலை அசைவுகளைக் குறிக்கின்றது. இது கதாபாத்திரத்தின் இயல்பு மற்றும் உணர்வுகளை வெளிப்படுத்த பயன்படுகிறது.இவை, ஒரு குறிப்பிட்ட கைநிலையையோ, ஒரு நற்குணத்தையோ அல்லது தீமையையோ குறிக்கலாம்.

2. மியே (Mie): மியே என்பது கபுகி நடனத்தில் மிகவும் உணர்ச்சிவசப்பட்ட தருணங்களில், நடனக்கலைஞரால் கையாளப்படும் ஓர் சிறப்பு நிலை ஆகும்.இது பெரும்பாலும் கைசைக்களுடன் சேர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. அத்தருணத்தின் முக்கியத்துவத்தையும், கதாபாத்திரத்தின் வலிமையையும் வலியுறுத்தும்.

3. ஒன்னகடா கைசைக்கள் (Onnagata Gestures): ஒன்னகடா என்பது பெண்களின் பாத்திரங்களை ஆண்கள் நடிக்கும் பாங்கு. இவை மிகவும் மென்மையான மற்றும் செம்மையான கைசைக்களைக் கொண்டுள்ளன.

4. குறியீட்டு கை அசைவுகள் (Symbolic Gestures): கபுகி நடனத்தில் சில கை அசைவுகள் நேரடி செயல்கள் அல்ல, ஆனால் அவை ஒரு உணர்வை அல்லது நிலையைக் குறிக்கும். உதாரணமாக, ஒரு கை வட்டமாக சுழலும் போது, அது காலத்தின் ஓட்டத்தையோ அல்லது உள்நிலை குழப்பத்தையோ குறிக்கலாம்.

கபுகியில் பெண்கள் பாத்திரங்களை ஆண்கள் நிகழ்த்துவர். அவர்கள் பயன்படுத்தும் கைச்செயற்பாடுகள் மிகவும் மென்மையானவை. விரல்கள் வளைந்தபடி மெதுவாக நகர்த்தப்படுவது, பறவை பறக்கும் விதம், பூவின் மலர்வதைப் போன்ற இயற்கை ஒவியங்களை சைகையாக வடிவமைத்தல் போன்று அமையும். சண்டைக் காட்சிகளில் கைகளின் இயக்கம் களரி போன்ற முறைப்படி பறக்கும் போக்கில் காட்டப்படும். கைகளை விரைந்து தட்டுவது, முறுக்கு செயல்வழிகள் போன்றவை இதில் இடம்பெறும்.

**பாலினியில் கைச்செயற்பாடுகள்**

இது இந்தோனேசியா நாட்டின் பாலியிலிருந்து வந்த பாரம்பரிய நடனம். தெய்வாராதனை மற்றும் ஆன்மீக சடங்குகளுக்காக உருவானது. பாலினியின் நடன வகைகளாவன,

1.லெகோங்க் எனப்படும் இளம் பெண்கள் ஆடும் மிக நுட்பமான நடன வடிவம்,

2.பரோங்க் எனும் நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போராட்டத்தை சித்தரிக்கும் நடன வடிவம்,

ISSN: 2582-9513

3.கெகாக் எனும் ஆண்கள் கூடி ஆடும், சப்த உச்சரிப்புகள் அடிப்படையாக உள்ள நடன வடிவம்

என்று மூன்றாக அறியப்படுகின்றது.

பாலினி நடனத்தில் கை மற்றும் விரல்கள் மென்மையாகவும், குறிப்பிட்ட வடிவங்களில் சுழற்றியும் இயங்குகின்றன. பாலினி நடனம் ஆன்மீக அர்த்தங்களை வெளிப்படுத்தவும் கதைகளைச் சொல்லவும் "முத்திரைகள்" எனப்படும் குறியீடுகளைப் பயன்படுத்துகிறது. இந்நடனம் பெரும்பாலும் இந்து மதம், பாலினிய புராணம் மற்றும் வாழ்வின் ஒழுக்கப் பாடங்களைப் பிரதிபலிக்கிறது. இக்கைக்குறியீடுகளாவன, பாலினி நடனத்தில் கதைசொல்லலின் ஒரு முக்கிய பகுதியாகும். ஒவ்வொரு முத்திரையும் ஒரு குறிப்பிட்ட ஆன்மீக அர்த்தத்தைக் கொண்டுள்ளது. நடனக் கலைஞர்கள், பாலினி நடனத்தின் கைச்செயற்பாடுகளை மற்ற அங்க அசைவுகளுடன் இணைந்து பல்வேறு கதைகளிலிருந்து கதாபாத்திரங்கள் மற்றும் நிகழ்வுகளை சித்தரித்து வழங்குவர். பாலினி நடனம் அதன் அழகான மற்றும் பகட்டான கை சைகைகளுக்கு பெயர் பெற்றது, பெரும்பாலும் சிக்கலான விரல் அசைவுகள் மற்றும் கைகள் மற்றும் விரல்களின் பயன்பாடு ஆகியவை இதில் அடங்கும். இந்நடனம் கைச்சைகைகளின் மூலம் உணர்வுகள், கதையின் திருப்பங்கள், உடலின் சமநிலை ஆகியவை வெளிப்படுகின்றன.

**கிமிர் நடனத்தில் கைச்செயற்பாடுகள்**

கிமிர் நடனம் என்பது கம்போடியாவின் பாரம்பரிய மற்றும் செவ்வியல் நடன வடிவமாகும். இது பழங்காலத்தில் அங்கோரியப் பேரரசின் காலத்திலேயே தோன்றியது. இந்த நடனத்தில் கைச் செயற்பாடுகள் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை இந்திய நடனங்களில் பயன்படுத்தப்படும் முத்திரைகளிலிருந்து தோன்றியதாக அறியப்படுகின்றது. கிமிர் நடனக்கலைஞர்கள் உணர்வுகளை, இயற்கையை, கதையினை காட்சிப்படுத்த கைகளை நுட்பமாகப் பயன்படுத்துகின்றனர். இந்நடனத்தில் கைகள் பலவிதமான இயற்கை அம்சங்களை சித்தரிக்கின்றன. கம்போடியா கிமிர் நடனத்தில் ஐந்து முக்கியமான கை வடிவங்கள் உள்ளன.

1. க்பாச் (Kbach)– கைச் சைகைகளுக்கான பொதுப் பெயர்- இது ஒரே ஒரு சைகையல்ல. பல வகையான கை இயக்கங்களின் கூட்டுப் பெயர்

ISSN: 2582-9513

2. க்பாச் சியூங்க் (Kbach Cheung / Kbach Khmer) – கை சைகைகளின் வகைகள்-கம்போடிய நடனங்களில் உள்ள கைச்சைகைகள் பெரும்பாலும் நடைமுறை செயல்கள் அல்லது பழமொழிகள், நம்பிக்கைகள் ஆகியவற்றைக் குறிக்கின்றன

3. கை இயக்கத்தின் திசைகள் (Directional Flow of Movement)-கைகள் பின்பற்றும் முப்பரிமாண இயக்கங்கள்: முன்–பின், மேல்–கீழ், இடம்–வலம் என நடனக்கலைஞர் ஒரே கையால் பல்வேறு பொருட்களான மலர், பசுமை,விலங்கு,தட்பவெட்பம் போன்றவைகளை வெளிப்படுத்த முடிகிறது

4. கை மற்றும் விரல் வளைவுகள் (Flexibility and Precision)- கைசைகைகள் மிக மென்மையாகவும், விரல்களின் வளைவுகள் கோணத்துடன் கூடிய அழகுடன் இருப்பதும் குறிப்பிடத்தக்கது

5. கண்கள் மற்றும் முகபாவங்களுடன் இணைந்த இயக்கங்கள்- கைகள் மட்டுமல்ல, அவை கண்கள் மற்றும் முகச்சைகைகளுடன் இணைந்து ஒரு முழுமையான பாவனையை உருவாக்குகின்றன.இது கிமிர் நடனத்தின் நுணுக்கத்தையும் மென்மையையும் பிரதிபலிக்கிறது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொன்றும் இயற்கையினோடும், மனநிலைகளோடும் தொடர்புடையவை. கிமிர் நடனக் கலைஞர்கள் சிறு வயது முதலே கைச்செயற்பாட்டிற்குரிய கடுமையான பயிற்சி மேற்கொள்கின்றனர். இவர்களுக்கு விரல்களை மிக நுட்பமாக நெகிழச் செய்யும் பயிற்சி வழங்கப்படுகிறது. விரல்களின் கடினமான சாய்வு மற்றும் வளைவை இயற்கையாக நிகழ்த்த பயிற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

**முடிவுரை**

உலகத்தின் பல்வேறு கலாச்சாரங்களில் தோன்றிய நடன வடிவங்களில், கைச் செயற்பாடுகள் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன. மனிதரின் உணர்வுகளையும், கதைகளையும், ஆன்மீக உணர்வுகளையும் சொற்கள் இல்லாமல் வெளிப்படுத்துவதற்கான ஒரு நுணுக்கமான மொழியாக கைகள் செயல்படுகின்றன.

இந்தியாவின் பரதநாட்டியத்தினைப் போன்றே இந்தோனேசியாவின் பாலினி, ஜப்பானின் கபூகி, கம்போடியாவின் கிமிர், ஸ்பெயினின் ஃபிளமிங்கோ, ஆப்பிரிக்க நடனம்,

பேலே வரை ஒவ்வொரு நடனத்திலும் கைகள் தனித்துவமான முறையில் கதைகளை சொல்கின்றன என்பதனை நாம் அறியலாம். முத்திரைகள், சுழற்சிகள், விரிப்பு, வளைவு, நுட்ப அசைவுகள் போன்றவை மூலம் கைகளின் ஒவ்வொரு அசைவும் ஒவ்வொரு பொருளினை சுமந்தே செயல்படுகின்றது. கைகளை நுட்பமாக இயக்கி, உணர்வுகளின் ஆழத்தையும், சமூகவியல் மற்றும் ஆன்மீகக் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறமை, நடனங்களை சிறப்பிக்கும் ஓர் அழகியல் அம்சமாக இருக்கிறது. இவ்வாறு கைகள் மூலம் உருவாக்கப்படும் சைகைகள், பார்வையாளர்களை நேரடியாகத் தொடும் சக்தியை பெறுகின்றன. எனவே, உலகின் நடன கலாச்சாரங்களில் கை செயற்பாடுகள் ஒரு மொழியாகவும், கலையாகவும், உயிர்ப்பாகவும் வலிமை பெற்றிருக்கின்றன என்பதனை நாம் கூறலாம்.

**துணை நூற்பட்டியல்**

1. தி ஆர்ட் ஆஃப் ஃப்ளெமென்கோ - எடிடோரியல் ஜெரெஸ் இன்டஸ்ட்ரியல் (1962)- டர்ன் ஈ. போஹ்ரென்
2. எர்த் இன் ஃப்ளவர்: தி டிவைன் மிஸ்ட்ரி ஆஃப் தி கம்போடியன் டான்ஸ் ட்ராமா- பால் க்ராவத்
3. இன்ஸைட் கபூகி: ஏந் எக்ஸ்பீரியன்ஸ்இன் கம்பேரிடிவ் ஏஸ்தெடிக்ஸ்- ஹெர்டா பாலி
4. பாகிஸிம்பா: ஜென்டர் இன் தி மியூஸிக் அண்டு டான்ஸ் ஆஃப் தி பகான்டா பீபிள் ஆஃப் யுகான்டா- ஸில்வியா A. நேன்யோங்கா- டமுசூஸா
5. டான்ஸ் ஜெஸ்ட்சர் ரெக்க்நிஷன்: அ சர்வே - மம்பி தேவி, சரத் சஹாரியா, D K பட்டாசாரியா
6. கபூகி: ஃபைவ் க்ளாஸிக் ப்ளேஸ்- ஜேம்ஸ் R ப்ரேன்டன்
7. ரீடிங் டான்ஸ்: தி பர்த் ஆஃப் கோரியாலஜி- ருடால்ஃப் அண்டு பெநெஷ்